மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2019 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28ம் நாள் வியாழக் கிழமை

1873ம் ஆண்டு 10ஆவது ஏற்பாட்டின்படி திரு.ஆர்.சக்திவேல், உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

அசல் வழக்கு எண். 406/2017 (பழைய எண்.51/2008) என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. செல்லக்குட்டி | வயது | .. |
| த/பெ. | .. | சாதி | .. |
| கிராமம் | .. | சமயம் | .. |
| தாலுக்கா | .. | தொழில் | .. |

28.03.2019 - வா.சா.1 முதல் விசாரணை தொடர்ச்சி.

என் தகப்பனார் ஏற்கனவே இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.444/2004 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. மேற்படி தீர்ப்பாணையின் அடிப்படையில் என் தகப்பனார் இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நிறைவேற்று மனு எண்.55/2006 இன் ஓஎஸ்.454/2004 என்ற மனுவின் சான்றிட்ட நகல் மற்றும் மேற்படி மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3. 30.5.2007 தேதியில் 1ம் வாதி பிரதிவாதிகளுக்கு கொடுத்த அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.4. மேற்படி அறிவிப்பை 1ம் பிரதிவாதி 5.6.2007 தேதியில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.5. மேற்படி அறிவிப்பை 2ம் பிரதிவாதி தனக்காகவும் தன்னுடைய மைனர் பிள்ளைகளுக்காகவும் 5.6.2007 தேதியில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.6. பிரதிவாதிகள் 3.7.2007 தேதியில் வாதியின் வழக்கறிஞருக்கு கொடுத்த பதில் அறிவிப்பு சார்வு நகல் வா.சா.ஆ.7. 28.2.1993 தேதியில் வாதிக்கு கிரையம் கொடுத்த பரசுராமன் மற்றும் அவரது தம்பி சின்னசாமி பெயரில் வழங்கப்பட்டுள்ள மனைவரி தோராயப்பட்டா வா.சா.ஆ.8. மேற்படி ஆவணங்களில்

வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.8 ஆவணங்கள் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

ஓம்./-வே.ஜெகன்னாதன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
போளூர்.